# இல்லற நாடகம்

'திருமணம்' என்று அழகாகச் சொன்னால் போதுமா? இனிப்பாகப் பெயரிட்டால் போதுமா?

பெண் ஒருத்தி பிறந்ததுமே அவளுக்கு கணவன் ஒருவன் இருப்பதாக நிச்சயிப்பதுபோல, இந்தத் திருமணம் என்னும் சொல்லுக்கு 'வாழ்வு'இன்றியமையாத ஜோடி. இந்த ஜோடிச் சொல்லிலே தோன்றிவிடும் தாம்பத்ய உறவு படும்பாடு! . . .

இரட்டைச் சொல்லாகிய திருமணம், பெண்ணினம் போல வன்மை கொண்டதுதான். 'திரு'வின்றி இருப்பினும், 'மண'முள்ளதுதான். வாழ்வு கூடும்பொழுது ஜாலக்காக ஒரு 'ம்' மட்டும் உதிர்ந்து விடுகிறது! அதன் பயனாக அதற்குக் குறையொன்றும் இல்லை! 'வாழ்வு' சிதைவதுபோல புலனாவதில்லை எனினும், வாழ்வுதான் சிதைந்து வக்ரமாகிறது! திருமணம் கூடினாலும் அதற்கு நலிவுதான் - கூடாவிட்டாலும் அந்த வாழ்வுக்கு ஒரு 'மண' மில்லை தான்!

இந்த சொற்களும் வியாக்கியானமும் எப்படியோ போகட்டும்! தம்பதி ஜோடியை என்னவென்று விமரிசம் செய்வது? கணவன் மனைவி என்றால் சச்சரவும் இருக்கும், சரசமும் இருக்கும், உண்மைதான்! ஆனால் அதற்கு வரம்பு இல்லையோ?

ஈசுவர சிட்சை, ஈசுவர சிருஷ்டி, ஈசுவர சேஷ்டை . . . இவற்றுள்ளே எந்த ஈசுவர லீலையைச் சேர்ந்தவர்களோ இந்த ஹேமா - ராமு தம்பதிகள்! ஹே, ராமா. . .

சதா சண்டை, சர்வதா தர்க்கம், சாசுவதம் புரைசல்! இவர்களிடையே அகப்பட்டுக்கொண்டுவிட்ட தாம்பத்ய உறவு சாகமாட்டாமல் ஊசலாடிக் கொண்டிருக்கிறது! உலகந்தோன்றினது முதல் உலகம் முடியும்வரை வாழத்தோன்றிவிட்ட பிறகு, முடிவு விரும்பும்பொழுது வந்துவிடுமா?

ஹேமாவும் ராமுவும் ரிக்ஷாவில் போகிறார்கள். அரை பர்லாங்குத் தொலைவிலே அவர்களுக்கு முன்னால் மூன்றுபேர் போய்க்கொண்டுருக்கிறார்கள்.

ஹேமா: அதோ, அந்த மூன்றுபேரிலே நடுவில் போகிறவர் சாம்பு போலிருக்கே!

ராமு: இருக்காது! அவர் ஊரிலேயே இல்லை!

ஹேமா: (நேரடியாக பதிலளிக்காமல்) ஏய், ரிக்ஷா, சீக்கிரம் போ!

(சைகிள் ரிக்ஷா விரைகிறது. முன்னால் சென்ற மூவரும் ஒரு கடையருகு நிற்கும் சமயம் அவர்களைக் கடந்து செல்கிறது)

ஹேமா: பார்த்தீர்களா? சாம்புதானே? நான் அப்பவே சொன்னேனே?

ராமு: தேவலையே! பின்னாடியிருந்தே அத்தனை தூரத்திலேயே எப்படிச் சொன்னாய்?

ஹேமா: அவரை இரண்டு தடவைதான் பார்த்திருக்கிறேன் - ஆனால் கிராப்பு நன்னா நினைவிருக்கு - பின்னாடி அழகாய் இருக்கும்.

ராமு: (மௌனம்.)

(சிறிது நேரத்திற்குள்ளே இருவரும் ஒரு சினிமா கொட்டகையிலே அமர்ந்திருக்கின்றனர்)

ஹேமா: அதோ பார்த்தீர்களா, அங்கே! நீலு வந்திருக்கிறாள்! சினிமா விட்டதும் போய்ப் பேசணும்!

ராமு: எங்கே? . . . ஓ, அங்கேயா? நீலுவா அது? லீலா போலிருக்கே?

ஹேமா: இல்லையன்னா! நீலுதான்! அவள்தான் அடிக்கடி இந்த 'ப்ளம்' கலர் பட்டுக் கட்டிப்பாள்!

ராமு: ஓ! அப்படியா? சரிதான்! அதோ . . .உன்னைப் பார்த்துவிட்டாள் அவளும்! லீலாதான்! நீலு இல்லை!

(ஹேமா பார்க்கிறாள். அவள் கண்களிலே அசடு கூடுகிறது. அக்காவின் புடவையைக் கட்டிக்கொண்டு வந்திருக்கும் லீலாவைப் பார்த்துக் குழப்பமுடன் முறுவலிக்கிறாள்)

ஹேமா - ராமுவின் இல்லற நாடகத்தின் ஒரு பகுதி இது! ஆண்களை எளிதிலே அடையாளம் கண்டுகொள்ளும் அவளுடைய திறமையும், பெண்களை அடையாளம் கண்டுகொள்ளும் அவனுடைய திறமையும் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல! அரைமணி நேரத்திற்குள் இருவருக்கும் வெற்றி, தோல்வி! பெருமைப் படக்கூடிய ஒற்றுமையா இது?

இத்தகைய ஏட்டாப்போட்டிகள் பல!

ராமு தலையை 'வெட்டி'க்கொள்ளும் முறையை ஹேமா வாயார, மனமார, வெறுப்பாள். அவளுக்குக் கலையுணர்ச்சியும் அழகுணர்ச்சியும் உண்டு - ஆனால் அவள் கணவன் செய்துகொள்ளும் தலைக்கொலையைக் கடிவாள். பச்சை பசேல் என்று நாற்புறமும் நன்றாக மயிரை நீக்கிவிட்டு, அரையும் குறையுமான அடர்த்திகொண்ட கிராப்பின் மேற்பகுதியை மட்டும் தலையிலே நிறுத்திக்கொண்டு, கையலகச் சொட்டையையும் விரல் நகத்தின் அளவுள்ள ஒரு வடுவையையும் கொஞ்சமும் பொருட்செய்யாமல் தலையை விகாரமாக அலங்காரம் செய்துகொண்டு வரும் கணவனைக் கண்டதும்,அவளுக்கு அடிவயிற்றிலிருந்து ஆங்காரமும், ஆத்திரமும் கிளம்பிவிடும். ஒரு வாரம் வரை இருவரும் பேசிக்கொள்ளமாட்டார்கள். அவனுடைய தலையிலே நாலுபுறமும் மயிர்கூடி, வடு மறைந்து, அவன் கொஞ்சம் பார்க்க லட்சணமானால்தான், அவளுக்கு சாந்தம் தோன்றி வளரும். அவனுடைய தலை கிராப்பு அடர்ந்து அழகாகவும், திருப்தியாகவும் இருக்கும்பொழுது கவலை பிடித்துக்கொண்டுவிடும் அவளுக்கு! "ஆச்சு, கோரம் பண்ணிக்கொள்ள நாள் வந்தாச்சொல்லியோ!" என்பாள். ராமுவுக்குக் கோபம் வரும். அவள் சொல்வது சரியாகவே இருக்கலாம் - ஆனால் மனைவியின் பேச்சைக் கேட்பதா? . . .அதுவும் தன்னுடைய சொந்தத் தலையலங்கார விஷயத்திலே! அவள் எங்காவது அவனுடன் போக திட்டமிட்டிருப்பாள், முதல் நாள் பச்சையாகத் தலையை குலைத்துக்கொண்டு வருவான்!

சொந்த விஷங்களிலே சுதந்திரம் வேண்டியதுதான்! ஆனால் அவள் சொல்வதிலே உண்மையை ஏற்பது தவறா? இழிவா? "உங்கள் தலையிலே பின்னாடி ஒரு சொட்டை ஒரு சொள்ளை இருப்பது உங்களுக்கு தெரியவில்லை என்றால் இரண்டு கண்ணாடி வைத்துப் பார்த்துக்கொள்ளக்கூடாதா? இந்த வடுவாவது மூடி இருக்கும்படி கொஞ்சமாக வெட்டிக்கொள்ளுங்களேன்!" என்று அவள் சொல்வதை சற்று கவனிக்கலாமல்லவா?

அவள் எத்தனையோ விதமான உபாயம் தேடுவாள். 'வீட்டில் மனைவியுடன் சந்தோஷமாக இருக்க வேண்டுமா? தொழிலில் முன்னேற வேண்டுமா? எங்கள் சலூனுக்கு வாருங்கள்!' என்று வந்திருக்கும் விளம்பரம் ஒன்றைக்காட்டி, 'எல்லா மனைவியரும் விரும்புவது கணவனின் அழகான கிராப்புதான் என்று தெரிகிறதா?" என்று சொன்னால் அவன் கேட்பானா? ராமு, ஆண்மை மிகுந்த ஆண்சிங்கம்! தலை 'அசிங்கம்' அஞ்சான்!

"பாழும் கிராப்பு விஷயம்தான் என்னை அந்தி நாளிலேயே மோசம் பண்ணிற்று! அத்தானுக்குத்தானே என்னைக்கொடுக்கிறதாக இருந்தார்கள்? ஒரு நாள் புத்தம் புதிதாகக் கிராப்பு வெட்டிக்கொண்டு அவன் வந்து நின்றதைக் கண்டுதான், "இவனையா பண்ணிக்கொள்வது?" என்று சந்தேகப்பட்டேன்! நாலுநாளில் நீங்கள் வந்தீர்கள் - அப்போ கிராப்பு ஜோராக இருந்தது!

அதைப்பார்த்து மயங்கி மோசம் போனேன்!" என்று அவனிடம் சொல்லி அங்கலாய்க்கிறாளே, அது அவள் பெண்மைக்கு அழகா?

"எல்லா மனைவியரும் . . . " என்று கூறி அவனுக்குச் சமாதானம் செய்வதற்கு பதில், "எல்லா புருஷர்களும் கிராப்பு செய்துகொள்ளும் லட்சணம் இதுதான் போலிருக்கு!" என்று இவள் சமாதானமடையலாமே?

"இந்தக் கிராப்பு விஷயம்தான் நம்ம கல்யாணத்திற்கே காரணம்!" என்று அவன் நயமாகப்பேச ஆரம்பித்தால், 'அடப்பாவமே!" என்று சாணத்தை சுவரிலே அறைந்து காட்டுவதுபோலக் கேட்டு, அவளைத் திடுக்கிடவைக்கிறான் ராமு!

"நான் ஏன் பிறந்தேன்?" என்றும், "கல்யாணம் பண்ணிக்கொள்ளாமல் சுதந்திரமாய் இல்லாமற்போனேனே!" என்றும் பெண்கள் அங்கலாய்ப்பதிலே சளைப்பதில்லை. ஆனால் தங்கள் பிறந்த நாளையும், திருமண நாளையும் மறக்கவே மறக்காமல், 'பரிசுகள் தரமாட்டாரா கணவர்?' என எதிர்ப்பார்ப்பதிலே குறைச்சல் இல்லை!

'பிறந்த நாள் கொண்டாடுவதாவது!' என்று ஒரு நாள் எப்போதோ ராமு சொல்லிவிட்டானாம்!ஹேமா வருஷா வருஷம் அதைச் சுட்டிக்காட்டத் தவறுவதே இல்லை! "எனக்கு வேண்டிய 'ஹாண்ட் பா' க்கை இந்த வாரம் வாங்கித் தந்துவிடுங்கள். அடுத்தவாரம், தப்பித்தவறி, என் பிறந்த நா_ளன்று, ஞாபக மறதியாய் வாங்கிவந்துவிட்டாலும் - அதற்குக் கிணறுதான் கதி!" என்பாள். பெண்ணாக்ப் பிறந்துவிட்ட பிறகு இத்தனை ரோசம் தகுமா? நாவடக்கம் வேண்டாமா?

அவள் மேலும் குற்றம் இருக்கிறது! சிநேகிதன் ஊரிலில்லாதபோது அவனுடைய மனைவியோடு பேசுவதற்கு என்று அங்கே போகவேண்டிய அவசியம் என்ன? 'போனால் என்ன??' என்பது அவனுடைய இங்கிதமற்ற, அழகற்ற கேள்வி. அந்தப் பெண்ணைப் பார்த்து இவன் இளிக்கிறான், முகத்திலே அசடு தேங்கி நிற்கிறான் என்று ஹேமா சொன்னால் மட்டும் தவறா? அது பொய்யா? 'உனக்கு அவளைக் கண்டால் ஆகாது என்றுதான் நான் மட்டும் போனேன்!' என்பான்! பொல்லாத்தனம்தானே இது?

'என் மனுஷாளைப்பற்றி குறை கூறாதே!' என்பான் அவன். அவள் மறைபொருளாகவே அவர்களைப் பற்றி குறை கூறிவிடுவாள்!அவன் முறைத்தால், 'பொதுவாக உலகத்தைப்பற்றி நான் சொல்லும்பொழுது, நீங்கள் ரோசப்படுவானேன்?' என்று கேட்பாள் இவள்! குறும்புதானே இது?

ஆககூடி இவர்களுடைய தாம்பத்திய வாழ்விலே தர்க்கமும், சள்ளையும், கோபதாபமும் ஒற்றுமையாய் _அமைந்து கூடுகட்டி விட்டனவே! இந்த அம்சங்களுக்குள் வேற்றுமை இல்லை!

காதல் அன்பு அழகைக் கண்டு உண்டாவதுண்டு. அறிவைக் கண்டும் உண்டாவதுண்டு. அழகினால் உண்டாகும்பொழுது, காதல் உள்ளம், அழகினோடு அறிவைக் கற்பனை செய்துகொள்கிறது! அறிவினால் ஏற்படுமானால் அறிவோடு அழகினைக் கற்பனை செய்துகொள்கிறது! அறிவு,அழகு, இரண்டும் தேவை, மானிட இதயத்திற்கு. தாம்பத்திய வாழ்விலே அழகும் அறிவும் ஒன்றி இலங்கவேண்டும். இது அசாத்தியமா? ஒருவர் வெறுப்பு விருப்புகளை மற்றவர் உணர்வதும் பரஸ்பரம் மனதிற்குகந்த முறையிலே பழகுவதுதான் அறிவும் அழகுமாகக் கருதப்படுகிறது! வாழ்விலே பிணைக்கப்பட்டபின் இவ்வளவுகூட கவனம் வேண்டாமா?

நாடகத்திற்கும் கதைக்கும் சிறப்பு உண்டாவது அவற்றின் முடிவுச் சிறப்பு யொட்டித்தான்! இவர்களுடைய இல்லற நாடகம் முடிவு சிறப்பு உள்ளதுதான் என்று ஒப்புக்கொள்ளவேண்டும்! இருவரும் பிரிந்துபோய்விடாமல் ஏதோ தாம்பத்திய உறவிலே வாழ்கிறார்களே! அந்தத்

தாம்பத்திய உறவுகூட. தன் சோகக் கதை சிறப்புள்ளது என்று ஒப்பவேண்டும்! 'விரட்டப்பட்டால், நலிவுற்ற நிலையிலும் அவர்களிடம் ஒண்டியிருக்க இயலுகிறது' என மகிழவேண்டும்.

புது உளுந்து போல பசையுடன் இருக்கவேண்டிய உறவு, பழைய உளுந்து போல பசை குன்றிவிட்டதே! அன்பு என்றுமே புதுமையாகி விளங்க முடியுமே! இவர்கள் இவ்வளவு அக்கரை கெட்டிருப்பதால் அல்லவா வீணாகிறது?

இவர்களிடையே அகப்பட்டுக்கொண்டுவிட்டதனால், எனக்கு சகவாச தோஷமும், வீட்சியும், பண்புக்குறையும் ஏற்பட்டுவிட்டன! இலக்கிய உபமானம் கொடுக்க சக்தி ஏது?அற்பப் பண்டம்தான் உவமைக்கு தோன்றுகிறது! வலிவு இழந்து நலிவு கண்டுவிட்ட தாம்பத்திய உறவுதானே நான்? வளர்ந்து தேய்ந்தும், தேய்ந்து வளர்ந்துங்கூட பெருமை குன்றாது விளங்கும் வானத்து மதியம் போலவா இருக்கிறேன் இன்னமும்?

**********

(சுதேசமித்திரன், பிப்ரவரி 18, 1951)